**April 17 – Steering Committee Meeting**

சித்திரை 17, 2019
வழிப்படுத்து குழுவின் சந்திப்பு

*இணையத்தளம் மூலமாகவும் ஆலோசனை பெறுவதற்கான அணுகுமுறைகள் முன்வைக்கப்பட்டன. வார இறுதிக்குள் இதற்கான செயற்படிவம் ஒன்று பூர்த்தியாக்கப்படும்.*

*எமது கடந்த சந்திப்புக் கூட்டங்களைப் பற்றிய விபரங்களை விமலச்சந்திரன் பாராளுமன்ற உறுப்பினர் கரி ஆனந்த சங்கரியுடன் பகிர்ந்துகொண்டார். இதன் போது ஏற்கெனெவே நடைமுறையிலுள்ள,தகுதியான சமூக நலத்திட்டங்களுக்கு உதவி வழங்கும் கனடிய மத்திய அரசு, ஒண்டாரியோ மாகாண அரசு, மற்றும் நகரசபை ஆகிய மூன்றினதும் முக்கூட்டு ஒப்பந்த நிதியுதவியின் கீழ் எமது தமிழ் சமூக மையத்துக்கான திட்டம் நிதியுதவி பெறக்கூடிய சாத்தியம் பற்றிய நம்பிக்கையை மத்திய அரசின் உறுப்பினர் கரி ஆனந்தசங்கரி அவர்கள் தெரிவித்தார். இதன் சாத்தியம் பற்றி ஒண்டாரியோ மாகாண, மற்றும் ரொறொன்ரோ மற்றும் மார்க்கம் நகரசபை மட்டங்களில் கலந்துரையாடுவதற்கான அவசியத்தை வழிப்படுத்து குழு ஏற்றுக்கொண்டது.*

*ராங் நகரசபையுடன் நடந்த கலந்துரையாடல்களின் சாரத்தை குழுவுடன் பகிர்ந்துகொண்டார், இத் திட்டத்துக்கான சாத்தியமான இட ங்களை நகரத்தில் அடையாளம் காணுமாறு மாநகர முதல்வர் அலுவலகம் கேட்டுக்கொண்து. இது பற்றி மாநகர சபை அலுவலர்களுடன் மேற்கொண்டு சந்திப்பு ஒழுங்கு செய்யப்படும். மாநகரசபை உறுப்பினர் மக்கேல்வி எமது திட்டத்துக்கான ஆதரவுக்கடிதம் ஒன்று அனுப்பியுள்ளதை குழு வரவேற்றது. ராங் மின்னஞ்சல் மூலமாக மாநகரசபை உறுப்பினர்களான மக்கேல்வி, லா ய் ஆகியோருடன் தொடர்பு கொண்டு நேரடி சந்திப்பு ஒன்றை ஒழுங்குசெய்வதாக உறுதிப்படுத்தினார்.*

*எமது குழுவின் கூட்ட அறிக்கைகளை இணையத் தளத்தில் தரவேற்றும் நோக்குடன் தமிழில் மொழிபெயர்த்துத் தருவதாக ரொட்றிகோ சம்மதம் தெரிவித்தார்.*

*குழு உறுப்பினர்கள் ஷான், சாந்தகுமார், ரொட்றிகோ, கேதீஸ்வரன் ஆகியோர் இத் திட்டத்திற்கு சமுதாயத்தை உள்வாங்குவதற்கான வழிவகைகளை கலந்தாலோசித்து குழுவிற்கு அறிக்கை சமர்ப்பிப்பார்கள் என ஏற்றுக்கொள்ளப்பட்து.*